# மதுரையில் மேடை நாடகங்கள்

**முனைவர் பா. சிங்காரவேலன்**
**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**அரசு கலைக்கல்லூரி, மேலூர் – 625 106**

8

**ஆய்வின் நோக்கம்**

ஆதி மனிதன் வேட்டைக்குச் செல்லும் முன் நிகழ்த்திய பாவனை மந்திரச் சடங்குகளே, பின்னாளில் நாடகமாக வளர்ச்சியடைந்தன. சைகையில் தோன்றிய கருத்துப்பரிமாற்றம் இயல், இசை, நாடகமாய் மலர்ந்து மக்களை மகிழ்வித்தன. தொடக்கத்தில் மதத்தோடு தொடர்புபடுத்தப்பட்ட நாடகத்தை, இலக்கியத்தில் கல்வெட்டுக்களில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும், மதுரை நகரில் நாடகக் கலைக்கும், கலைஞர்களுக்கும் கிடைத்த அங்கீகாரத்தைப் படைப்பாளர்கள் பதிவு செய்துள்ளதை எடுத்தியம்புவதே ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

மனிதன் தன் கருத்துக்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளத் தொடங்கிய காலத்தில் தான் நாடகம் தோன்றியது. அவ்வரிசையில் ஓவியம், சிற்பம், நடனம், இசை என்பவற்றில் இறுதியாக நாடகம் தோன்றியது என்பதைக் கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியன்

**இன்னிசையும் இலக்கியமும் எழிலார்ந்த**
**ஓவியமும் சிற்ப மாண்பும்**
**பின்னியொரு நாடகமாம் கலைவடிவம்**
**பெற்றதுவும் பெருமை யன்றோ? 1 என்கிறார்.**

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர்கள் ஆண்ட பூமியில், சைவக் கடவுளான சிவபெருமான் அடியவருக்காகப் பல நாடகங்களை நடத்தியவர். அத்தகைய மதுரையில் நாடகக் கலையும், கலைஞர்களும் எவ்வாறு வளர்ந்தன என்பதையும், பார் போற்றும் தமிழ் இலக்கியத்தில் நாடகப்பதிவு இடம் பெற்றிருப்பதையும் ஆய்வுக்கட்டுரையில் காண்போம்.

**தமிழ் இலக்கியத்தில் நாடகப்பதிவுகள்**

மனிதன் உருவாக்கிய ஒவ்வொரு படைப்புக்கும் ஒரு தொன்மம் உண்டு. அவ்வகையில் நாடக உருவாக்கத்திற்கும் ஒரு கதை இருப்பதைக் கலைக்களஞ்சியம் “படைப்புக் கடவுளைப் பார்த்துக் இந்திரன் கேட்டானாம். எங்கள் கண்களுக்கு விருத்தளிப்பதாக ஒரு காட்சி வேண்டும் என்று, உடனே அவர் தியானத்தில் ஆழ்ந்தார். தேவலோகச் சிற்பியான விசுவகர்மா நாடக அரங்கினை அமைத்தார். சிவபெருமான் அதில் நடனமாடினார் இசை முழங்கியது. வானுலகில் நடந்த இந்தத் தெய்வீக நடனத்தைப் பரதமுனிவர் உலகத்துக்குக் கொண்டு வந்தார். அந்தப் பரத நாட்டியத்தில் இருந்து தான் நாடகம் தோன்றியது”2 – என்ற செய்தி இடம் பெறுவதைத் காணமுடிகிறது. மக்களை மகிழ்விக்கும் நாடகத்தினை “நாடகம் நாட்டிற்கு அணிகலன், நாகரிகத்தின் அளவுகோல், நாட்டின் பிரதிபலிப்பு, பாமரர்களின் பல்கலைக்கழகம், சமுதாயச் சீர்கேடுகளைத் தகர்க்கும் வாள்வீச்சு, இதயநாதத்தின் எழுச்சி காலத்தின் கண்ணாடி, இலட்சியக் கனவுகளையெல்லாம் ஈடேற்றி வைக்கும் அற்புத சாதனம், வாழ்க்கையின் விளக்கம், வரலாற்றின் பொன்னேடு, கற்பனைக் கருவூலங்களை விளக்கும் அற்புத

ஒளிவிளக்கு, உலகக் கலை அனைத்தையும் தன்னகத்தே கொண்ட உயிரோவியம்”3 என்பார் மு.சா. கிருஷ்ணமூர்த்தி. இத்தகைய தொன்மையான நாடகத்தை தொல்காப்பியர்.

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கிலும்**

**பாடல் சான்ற புலனெறி வழக்கம்” (தொல்-பொருள் அகத் – 53)**

என்று குறிப்பிடுகிறார். உலகம் தோன்றிய காலத்திலேயே நாடகம் தோன்றின என்பதற்கு இந்நூற்பா சான்றாக அமைகின்றது. மேலும் ஐம்புலன்களுக்கும் நாடகம் இன்பளிக்கக் கூடியது என்பதைப் பின்வருமாறு உரைக்கின்றார்.

**கண்ணிலும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடைய மாந்தர்க்கு அல்லது தெரியின்**

**நன்னயப் பொருள்கோள் எண்ணுருங் குரைத்தே” (தொல்-பொருள் மெய்.27)**

என்ற நூற்பாவில் செவிடரும், குருடரும் மகிழக் கூடிய வகையில் நாடகத்தில் நடிப்பும் உரையாடலும் ஒருங்கே அமையும் எனபார். மேலும் நாடகத்தை வேத்தியல், பொதுவியல் என்று இரண்டாகப் பிரித்தனர். அரசர்கள் பிரபுக்கள், அறிஞர்களுக்காக நடிக்கப்பட்ட நாடகங்களை ‘வேத்தியல்’ என்றும், பொதுமக்களுக்காக நடத்தப்பட்ட நாடகங்களைப் ‘பொதுவியல்’ என்றும் அழைத்தனர். சங்கப்பாடல்கள் பல நாடகப் பாங்கில், தன் உணர்ச்சி மொழியாக விளங்கின. புறநானூற்றுள் பாரிமகளிர் பாடிய பாடலை, “அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவின்” (புறம் – 112) நாடகத் தன்னுணர்ச்சி பாட்டுக்குச் சான்றாகக் கூறலாம். இவை தவிர,

**குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும் (புறம் – 47)**

**சிற்றில் நற்றூண் பற்றி (புறம் – 86)**

**அகவன்மகளே அகவன் மகளே” (குறுந் - 23)**

**எறித்தகு கதிர்தாங்கி (கலித்-9)**

என்ற அடிகள் நாடகத்தன்மையுடன் விளங்குகிறது. சங்கப்பாடல்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் முதலியோரின் உரையாடல்கள் நாடகப்பாங்கில் அமைந்துள்ளன. மேலும் சங்கப்பாடல்கள் முதல், கரு, உரிப்பொருள்கள் ஆகியவற்றை ஏற்றும், நாடக இலக்கணத்தில் குறிப்பிடுகின்ற களம், காட்சி, போன்ற அமைப்புகளைப் பெற்றும் விளங்குகின்றன.

**‘நாடக மகளிர் ஆடுகளம்’** என்று பெரும்பாணாற்றுப்படை (55) நாடகக் களத்தைக் குறிக்கிறது. கூத்தும் நாடகமும் ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள். காந்தள், வள்ளி, துணங்கை, குரவை, துடிநிலை, ஆரியக்கூத்து, வள்ளிக்கூத்து, சுழல்நிலைக் கூத்து, பிள்ளைப்பாட்டு, அமலைக்கூத்து, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை, வெறியாடல், கயிற்றாடல், வேட்டுவவரி, கொடுகொட்டி, கரணம், விதூடக் கூத்து, வென்றிக்கூத்து, வசைக்கூத்து, விநோதக்கூத்து ஆகியவை சங்ககாலக் கூத்துக்களாகும். **“கதை தழுவி வரும் கூத்து நாடகமாகிறது”** என்பார். ச.சு. இளங்கோ. சங்ககாலத்தில் நடிகர்களைப் பொருநர் என்று அழைக்கப்பட்டனர். பட்டினப்பாலை **“பாடலோர்ந்தும் நாடகம் நடத்தும்”**[113] என்ற வரிமூலம் நாட்டிய நாடகம் வழக்கிலிருந்ததை அறியமுடிகிறது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியம் என்றழைப்பர். இதனை

**'அடியார்க்கு நல்லார் கதை தழுவிய கூத்து'** என்பார். மாதவி ஆடிய 11 வகை கூத்துக்களைப் பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. மாதவியை நாடகக் கணிகை என்ற இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். பெருங்கதையில் **"கோயில் நாடகக் குழுக்களும் வருக என"**[4] அழைக்கப்பட்டதைப் பேரா.சு.சண்முகசுந்தரம் தம் **'தமிழ் நாடகக் சரித்திரம்'** என்ற நூலில் பதிவு செய்துள்ளார். மக்கள்,

**'நயத்திறம் பொருந்த நாடகம் கண்டு, நன்மனம் தெளிந்த நாடகம் போல்'**

என்ற வரிகள் கோயில்களிலும் பொதுவிடங்களிலும் நாடகங்கள் நடந்த செய்திகளைத் தெரிவிக்கிறார். சோழர்காலத்தில் எழுந்த சீவகசிந்தாமணியில் சீவகன் நாடகத்தில் நடித்த நடிகர்களுக்கு ஒரு ஊரையே தானமாகக் கொடுத்த செய்தியை அறியமுடிகிறது.

**பண்கனியப் பருகிப் பயன் நாடகம்**
**கண் கனியக் கவர்ந்து உண்டு (1253)**
**சுந்தர மகளிர் அன்னார்**
**நாடகம் இயற்றுகின்றார் (2598)**

போன்ற அடிகள் நாடகத்தின் பழமையை நமக்குக் காட்டுகிறது. மேலும்,

**'நாடகம் உருப்பசி, நாடக மகளிர் ஈரைம்பத்திருவரும், நாடக மகளிரும் நலத்தரு மாக்களும்'** போன்று பல்வேறு இடங்களில் நாடகம் என்ற சொல்லாட்சிகள் அமைந்துள்ளதை ஆறு அழகப்பன் நாடக விருந்து நூலில் குறிப்பிட்டுள்ளார். மணிமேகலைக் காப்பியத்தில் நாடகம் என்ற சொல்லாட்சி இடம்பெற்றிருப்பதை,

**நாடகம் காப்பிய நன்னூல் நுனிப்போர்**
**நாடகம் விரும்பிய நன்னிலம் கவினி" (18:58)**

என்னும் வரிகள் மூலம் அறியமுடிகிறது. ஆனால் சமணர்கள் நாடகத்தைச் வெறுத்தனர். மனத்தைக் கிளறச் செய்து இன்பமூட்டுவதில் அதற்கிணை எதுவும் இல்லை. எனவே இன்பத்தை ஊட்டிக் காமத்தை மிகுவித்தலின் அது கடியத்தக்கது என்று சமணர்கள் கருதினர். மேலும் ஏலாதி எழுதிய கணிதமேதாவியார் **"நாடகம் சேர்ந்தால் பகைவழி தீச்சொல்லே சாக்காடே தீர்ந்தாற்போல் தீராவரும்"**[5] என்று நாடகத்தால் வரும் கேடுகளைக் கூறுகிறார். இருப்பினும் சோழர்காலத்தில் கோயில்களில் நாடகம் நடத்தப்பட்டதற்கும், நடிகர்களுக்கு மானியம் வழங்கப்பட்டதற்கும் கல்வெட்டுச் சான்றுகள் இருப்பதை அறியமுடிகிறது.

**'இசை நாடகங்கள் இன்பத்தை விளக்கும்'** என்று நச்சினார்க்கினியரும், 'கண்டார்க்கு இன்பம் செய்தலின் நாடகம்' என்று பேராசிரியரும் நயமாகக் கூறுவர். "தொல்பழங்கால வாழ்வியலில் எந்த ஒரு சமூகக் குழுவிலும் நாடகப் பாங்கான கூட்டு நிகழ்வுகள் அச்சமூகத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக விளங்கி வந்திருக்கின்றன. ஒரு வேட்டையின் வெற்றிக் களிப்பாக, அறுவடையின் கொண்டாட்டமாக அல்லது வழிபாட்டுச் சடங்காக நாடகம் முகிழ்த்தது என்பார் அஸ்வகோஷ். சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்கவாசகர் **'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து' என்றும், 'என்னை நீ செய்த நாடகமே'** என்று திருவாசகத்திலும், **'நண்பனைத் தண்ணற வுண்ணளி போன்று ஒளிர் நாடகமே'** என்று திருக்கோவையாரிலும் கூறுகிறார். இதனால் மாணிக்கவாசகர் காலத்தில் நாடகங்கள் நிகழ்ந்ததை உணரமுடிகிறது. இசுலாமியர்களின் வருகைக்குப்பின் நாடகங்கள் புதுப்புது வடிவம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. **'அலி பாதுஷா நாடகம் அலாவுதீன் நாடகம்'** போன்றவை இசுலாமிய

மதக்கருத்துக்களைத் தாங்கி வந்தன. பின்னர் கிறித்துவ மதப்பிரச்சாரத்துக்கு **‘ஞான தச்சன் நாடகம், தேவ தச்சன் நாடகம், மரியதாசனின் ஊதாரிப்பிள்ளை விலாசம்’**, ஆகிய நாடகங்கள் உருவாக்கப்பட்டன. இவை தவிர பள்ளு, குறவஞ்சி, குளுவ நாடகம், நொண்டி நாடகம் போன்ற நாடகங்கள் உருவாயின. நொண்டி நாடகம் எள்ளல் சுவை மிக்கன மக்களைக் களிப்பூட்டியதுடன் சமயப்பிரச்சாரமும் செய்தன. இப்படி காலந்தோறும் நாடகங்கள் புதுப்புது கருப்பொருளைத் தாங்கி மக்களை மகிழ்விப்பதை அறியமுடிகிறது.

**மதுரையில் மேடை நாடகங்கள்**

திரு ஆலவாய் அண்ணலும், அன்னை மீனாட்சியும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் மதுரையில், வந்தியக் கிழவிக்காய் பிட்டுக்கு மண் சுமந்து சிவன் திருவிளையடல் நிகழ்த்திய திருத்தலம் மதுரை ஆகும். மதுரை திருவிழாக்களின் பூமி. தினந்தோறும் திருவிழா காணும் மதுரையைச் சிலப்பதிகாரம் ‘விழவுமலி மூதூர்’ என குறிப்பிடுகிறது. இம்மதுரையில் இருந்து தூத்துக்குடி செல்லும் சாலையில் அமைந்துள்ள ஊர் வலையங்குளம். இங்குள்ள கல்வெட்டினை மதுரை சரசுவதி நாராயணன் கல்லூரியின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனீஸ்வரன் கண்டறிந்தார். அதில் 312 ஆண்டுகளுக்கு முன் திருமலை நாயக்கர் ஆட்சி காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டில் “சாலிய வாகன சகாப்தம் 1710 வருடம் 15 திங்கட்கிழமை பூரண நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் வலையங்குளத்தில் இருக்கும் திருமலை மெச்சினார் பெருமை பெற்ற நாடகக்கலை, சங்கமறிய விநாயகர் கோயிலுக்கு திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்து திருமலை மெச்சன் உபயம்” எனக் குறிப்பிட்டுள்ளது. இங்கு வருடத்தில் 98 நாட்கள் தொடர்ச்சியாக புராணம் மற்றும் கலாச்சாரத்தைப் பறைசாற்றும் நாடகங்கள் நடைபெற்றன. இந்நாடகக் குழுவைப் பாராட்டி திருமலை நாயக்கர் செப்புப்பட்டயமும், குதிரையைத் தன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஓடவிட்டு, அக்குதிரை நிற்குமிடம் வரை விளைந்த நெல்லைக் கலைஞர்களுக்குக் கொடுத்துள்ளார். குதிரை நின்ற இடத்தை இன்று ‘குதிரை குத்தி, குதிரைக்குடி”6 என்று அழைக்கப்படுகிறது. மேலும் வலையங்குளம் கிராமத்தின் முன்னாள் தலைவர் செல்லத்துரையிடம் கேட்டபோது, இந்தக் கோயிலில் இருக்கும் தனிலிங்கப் பெருமான் ஒரு நாடகப் பிரியர். பக்தர்களின் வேண்டுதலைப் பகவான் நிறைவேற்றியவுடன், நேர்த்திக் கடனாக அவரவருக்குப் பிடித்த நாடகங்களைப் பக்தர்கள் போடுகின்றனர். ஆனால் முதல் நாடகமாக ‘அபிமன்யு சுந்தரி’ இடம்பெறும். ஒவ்வொரு வருடமும் மகா சிவராத்திரியன்று திருவிழா தொடங்கி, சித்திரை மாதம் பௌர்ணமி நாளில் கள்ளழகர் மதுரை வைகை ஆற்றில் இறங்கும் நாளுடன் நாடகம் நிறைவு பெறுகிறது என்கிறார்.

நாடகமூவர் : பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாசு சுவாமிகள், பரிதி மாற்கலைஞர் ஆகியோரின் பணிகளைப் பாராட்டி தமிழ் நாடக மூவர் என நாடக உலகத்தினர் அழைத்தனர். பம்மல் சம்பந்த முதலியார் 93 – நாடகங்களை எழுதி, இயக்கிய பெருமைக்குரியவர். சேக்சுபியர் நாடகங்களைப் போல இன்பியல், துன்பியல், கேளிக்கை என பன்முகக் கருத்துக்ளை அரங்கேற்றியவர். எனவே இவரைத் ‘தமிழ் நாடகத்தின் தந்தை’ என்று அழைக்கப்பட்டார்.

பரிதிமாற் கலைஞர் நாடகவியல் என்ற நூலின் வழி நாடகத்திற்கான இலக்கணங்களையும், கலாவதி, ரூபாவதி நாடக நூல்களையும் இயற்றியவர்.

அபிமன்யு சுந்தரி, வள்ளி திருமணம், கோவலன், நல்ல தங்காள், பிரகலாதன் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி இலக்கிய பெருமைக்குரியவர் சங்கரதாசு சுவாமிகள். எனவே இவரைத் 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' என்று சிறப்பிக்கப்படுகிறார். மதுரையில் பம்பல் சம்பந்த முதலியார் 'சுகுண விலாச சபை' என்றும், சங்கரதாசு சுவாமிகள் 'சமரச சன்மார்க்க சபை' என்றும் நாடக நிறுவனத்தை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள் ஆவர். இதில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சங்கரதாசு சுவாமிகள் மதுரை நகரில் பாலநாடக சபா, மதுரை பால விநோதினி சபா என்ற பெயர்களில் சிறுவர் சிறுமியருக்கு மேடை நாடகத்தையும், நடிப்பு, உடை, ஒப்பனை ஆகியவற்றையும் கற்றுக்கொடுத்து மேடையேற்றிய பெருமைக்குரியவர். எனவே சங்கரதாசு சுவாமிகள் பெயரில் தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் நாடக நடிகர் சங்கங்களைக் கலைஞர் நடத்தியும், ஒருங்கிணைத்தும் வருகின்றனர். மதுரையில் சுண்ணாம்புக்காரத் தெருவில் பல ஆண்டுகளாய் செயல்பட்டு வந்த தமிழ்நாடு நாடக நடிகர் சங்கம் தற்பொழுது மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் பெரிய அளவில் சங்கக் கட்டிடத்தைக் கலைஞர்கள் கட்டியுள்ளனர். நடிகர்கள் கலை நிகழ்ச்சிக்குச் சென்று வரவும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் எளிதில் சங்கத்தை அணுகவும் உதவிகரமாக இருப்பதைக் கள ஆய்வின் வழி அறியமுடிகிறது. ஒரு நாடக நடிகர் சங்கத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டவர் எந்த ஊரில் உள்ள நாடக குழுவிலும் இணைந்து நாடகமாடலாம் என்கிறார் நாரதர் வேடமேற்கும் நடிகர் ஜெயபார்த்தீபன் (மேலூர் 30.10.2023)

**நாடகத் தாத்தா**

மேடை நாடகத்தைப் பொதுவெளியில் அறிமுகம் செய்து வைத்தவர் நவாப் கோவிந்தசாமி ராவ் ஆவார். இவர் மகாராஷ்டிரர். சிவாஜி மன்னரது தம்பி தஞ்சாவூரை ஆண்டபோது மராட்டியத்திலிருந்து பரிவாரங்களோடு வந்தவர். தமிழ், ஆங்கிலம், மராட்டி ஆகிய மொழிகளில் புலமைபெற்றவர். மனமோகன நாடகக் கம்பெனியைத் தஞ்சையில் உருவாக்கியவர். ராம்தாஸ் சரித்திரம், அபிமன்யு, சிறுத்தொண்டர், திரௌபதி வஸ்திராபரஹணம், கர்ணவதம் ஆகிய நாடகங்களை நடத்தியவர். இசையாலும் பாட்டாலும் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றதால் 'தமிழ் நாடகத்தின் தாத்தா' என்று அழைக்கப்பட்டார். இவருடைய நாடகங்கள் மதுரை விக்டோரியா ஹாலில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

**'மதுரை ஒரிஜினல் பாய்ஸ்'** நாடகக் கம்பெனியை 1910 ஆம் ஆண்டில் எஸ்.எம்.சச்சிதானந்தம் பிள்ளை தொடங்கினார். கங்காராம், வீரசிவாஜி, பஞ்சாப் கேசரி என்று நாடகங்களை இளைஞர்களைக் கொண்டே அரங்கேற்றினார். பதிபக்தி, பம்பாய் மெயில் உள்ளிட்ட சுதந்திரப் போராட்ட நாடங்களையும், கிண்டியில் நடக்கும் குதிரைப்பந்தயம் எனும் சூதாட்டத்தின் விளைவையும், தீமைகளை விளக்க "கவர்னர்ஸ் கப்" என்ற நாடகத்தை 1935 ஆம் ஆண்டில் எழுதினார்7. ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்ட நாடகம். சச்சிதானந்தம் அவர்களின் தமிழ் நாடகப் பணியை அறிவதும், போற்றுவதும் மக்களின் கடமையாகும்.

நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை 'மதுரை தேவிபால விநோத சங்கீத சபை' என்னும் நாடகக்குழுவை 1933-இல் தொடங்கினார். இவருடைய ஐயப்பன் நாடகம் தான், தமிழகத்தில் ஐயப்ப பக்தி வளர முக்கியக் காரணமாகத் திகழ்ந்தார் என்பது நாடகத்துறை சார்ந்த அறிஞர்களின் கூற்றாகும்.

மதுரை பாஸ்கரதாஸ் கவிஞர், இசையமைப்பாளர், நாடகப்பாவலர் இவருடைய தலைமையில் தமிழ் நாடக நடிகர் சங்கம் மதுரையில் 1920 இல் தொடங்கப்பட்டது. தேசபக்தியும், விடுதலை வேட்கையும் நாடகத்தின கருப்பொருளாகத் திகழ்ந்தன.

டி.கே. சண்முகம் 1925-இல் 'மதுரை பால சண்முகானந்த சபா' என்ற பெயரில் ஒரு சிறுவர் நாடகக்குழுவைத் தொடங்கினார். பின் 1950ல் டி.கே.எஸ் நாடகக்குழு மேடை நாடகத்தில் ஒளி அமைப்பு, ஒப்பனை, இசை, திரைசீரை, ஆகியவற்றில் புதுமையினைப் புகுத்தி, தமிழர் வாழும் நாடுகளுக்கு சென்று நாடகத்தை நடத்தினார். இவர் ஔவை வேடமேற்று நடித்ததால் டி.கே.சண்முகத்தை மக்கள் ஔவை சண்முகம் என்றழைத்தனர்.

1978-ல் மதுரையில் நிஜநாடக இயக்கத்தை பேரா.மு.இராமசுவாமி தொடங்கினர். இவர் நந்தன் கதை, கலக்காரர் தோழர் பெரியார், சாபவிமோசனம், துர்க்கி அவலம் உள்ளிட்ட நாடகங்களை எழுதி இயக்கினார். துர்க்கி அவலம் தென்மண்டல நாடகவிழாவில் கலந்து கொண்டு, டெல்லியில் நடைபெறும் தேசிய நாடகவிழாவிற்குத் தேர்வு செய்யப்பட்டது சிறப்புக்குரியதாகும்.

**எழுத்தாளர்களின் பார்வையில்**

மதுரை நகரின் சிறப்பினை எடுத்துக்கூறும் எழுத்தாளர் நா. முருகேசபாண்டியன் "ராஜாபார்ட், ஸ்திரிபார்ட், பபூன், காமிக் பெண், நாரதர் என பல வேடங்களை ஏற்கும் கலைஞர்கள் சுண்ணாம்புக்காரத் தெருவினைச் சுற்றி வாழ்ந்தனர். மதுரை நகரின் அடையாளமாக மேலவெளி வீதியில் அமைந்துள்ள **'விக்டோரியா ஹால்'** பழமை கசியப் பிரகாசிக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பகலில் நூலகம், இரவில் திரையங்கமாகச் செயல்பட்டது. நீளமான தலைமுடியுடன், ஜிப்பா அணிந்து வித்தியாசமாக தோற்றத்தில் ஒருவரை நாம் சந்தித்தால் அவர் நாடக நடிகராக இருப்பர்" 8 என்று இணைய தள பக்கத்தில் கடந்தகால மதுரையை அசைபோடுகிறார். மேலும் மற்றொரு எழுத்தாளர், இயற்கை ஆர்வலர், பசுமை, நடைப்பயணத்தை ஒருங்கிணைக்கும் திரு அ. முத்துக்கிருஷ்ணன் மதுரை நகரினைப் பின்வருமாறு கூறுகின்றார். 'கலைக்கு ஒரு அழுத்தமான நோக்கம் இருந்தது. அன்றைக்குப் பல நாடகங்கள், பாடல்கள் பிரிட்டிஷ் அரசால் தடைசெய்யப்பட்டன. இதிகாசம், வரலாறு, என நாடகங்களை எந்தத் தலைப்பில் இருந்தாலும் அதன் ஊடே பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக, சுதந்திர வேட்கையை உருவாக்கும் வசனங்கள் பாடல்கள் இடம்பெறும். மதுரையில் நிகழ்த்தப்பட்ட பல நாடக அரங்குகளுக்கு வெளியே காவல்துறை முகாமிட்டிருக்கும்'. நடிகர்கள் நாடகம் முடிந்த பின்னும், சில நேரம் நாடகம் நிகழ்த்தும் போதும் கூட கைது செய்யப்பட்ட வரலாறுகளும் உண்டு. மதுரகவி பாஸ்கரதாஸ்

**கொக்கு பறக்குதடி பாப்பா – நீயும்**
**கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா**
**கொக்கென்றால் கொக்கு அது நம்மை**
**கொல்ல வந்து கொக்கு**
**எக்காளம் போட்டு நாளும் இங்கே**
**ஏய்த்துப் பிழைக்குதடி பாப்பா**
**வர்த்தம் செய்ய வந்த கொக்கு – நமது**

**வாழ்வைக் கெடுக்க வந்த கொக்கு”[9] (பக்.194-195)**

என்று வள்ளி திருமண நாடகத்தில் பாடிய வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார். அக்காலத்தில் பல திரையங்குகள் நாடக அரங்குகளாகச் செயல்பட்டன என்று அ.முத்துக்கிருஷ்ணன் ‘தூங்காநகர நினைவுகள்’10 எனும் முகநூலில் பதிவு செய்துள்ளார்.

**‘மதுரைக்கு வந்த ஒப்பனைக்காரன்’** என்ற சிறுகதையில் கோணங்கி சுண்ணாம்புக்காரத் தெருவில் நாடகக்காரி இருந்தாள். கொழும்பு, மலேயா வரை அவளோட புகழ் பரவியிருந்தது. அவருக்கு ஒப்பனை செய்யும் யுவனொருவன் சாஸ்திரம், இசை, ஓவியம் பயின்றவன். பல நாடங்களைப் பார்த்தான். கல்கத்தாவின் வீதிகளில் அவனைப்பற்றி பரவியது. பர்மா மலேயாவுக்கும் கம்பெனி சென்ற சமயம் அங்கும் பல நாடகக் குழுக்கள் தோன்றின11. என்று கதையினைத் தொடங்கி நாடகம் உள்ளிட்ட கலைகள், கலைஞர்கள் அவர்களுக்கான ஒப்பனைகள், ஒலி, ஒளி அமைப்பு குறித்துப் பதிவு செய்துள்ளார். (பா. சிங்காரவேலன் (தொ.ஆ) மண்மணக்கும் கதைகள், ப.92)11
மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவரான சண்முகராஜா நிகழ் நாடகக் குழுவைத் தொடங்கி நடத்தி வருகிறார். திரைப்படங்களில் நடித்து தனக்கென தனித்த அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளார்.

மணல் மகுடி குழுவை நடத்தி வரும் முருகபூபதி மதுரைக் கல்லூரி, அமெரிக்கன் கல்லூரி வளாகத்தில் நவீன நாடகத்தை நடத்தி வருகின்றார். இப்படி சிறு பெரும் குழுக்கள் மதுரை நகரில் உள்ள இராஜா முத்தையா மன்றம், லட்சுமி சுந்தரம் ஹால் ஆகியவற்றில் பல்வேறு நாடகங்களை அரங்கேற்றி வருவதையும் காணமுடிகிறது. நாடகத்தின் பயனை

**“கண்ணைச் செவியைக் கருத்தைக் கவர்ந்து நிதம்**
**எண்ணரிய போதனைகள் ஈவதற்கு – நண்ணுமிந்த**
**நாடக சாலையொத்த நற்கலா சாலையொன்று**
**நீடுலகில் உண்டோ நிகர்த்து[12]**

என்பார் கவிமணி தேசிய விநாயகர் பிள்ளை நாடகக்கலை மக்களுக்கு அன்றாட அரசியல், சமூக, பொருளாதார, புராண இதிகாச கருத்துக்களை எளிமையாகச் சென்று சேர்த்தன. மத்திய அரசு யுவகேந்திரா என்ற அமைப்பின் மூலம் முதியோர் கல்வி, பெண்கல்வி, பெண் குழந்தை பாதுகாப்பு, தண்ணீர் சிக்கனம், சிறுசேமிப்பு, தீய பழக்கங்களிலிருந்து விடுபடல் உள்ளீட்ட விழிப்புணர்வுப்; பிரச்சாரங்களைக் வீதி நாடக இயக்கமாகச் செய்வதற்கு நாடகக் கலைஞர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

**முடிவுரை**

அண்ணல் காந்தியை மகாத்மாவாக மாற்றியது அரிசந்திர நாடகம். நாட்டை நம் கண் முன்னே கொண்டு வருவது நாடகம் என்கிறார் கவிக்குயில் சரோஜினி. மக்களோடு மக்களாய் மதுரை மண்ணில் வளர்ந்த நாடகக் கலையினை அண்டை மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் சென்று மாதக் கணக்கில் நிகழ்ச்சியை நாடக குழுவினர் நடத்தினர். அரசியல் தலைவர்கள் நாடகத்தைத் தொடங்கி வைப்பதும், நாடகம் நிறைவு பெற்றதும் வாழ்த்திப் பேசும் மரபு தமிழகத்தில் வழக்கில் இருந்தன. திரைத்துறையில் கோலோட்சிய பலர் நாடகத்துறையிலிருந்து வந்தவர்கள் என்பதை ஆய்வுலகம் நன்கறியும், நலிந்த நாடகக் கலைஞர்களுக்கு அரசு வீட்டி மனைப் பட்ட வழங்கிய இடம் மதுரையில் தனக்கன்குளமாகும். மேடை நாடகத்தின தலைமையிடமாக மதுரை நகர் விளங்குகிறது. அந்நகரில் செயல்படும் நாடகக் கலையினைப் போற்றுவோம். கலைஞர்களைக் காப்போம்.

**அடிக்குறிப்புகள்**

1. ப.நீலகண்டன், நாடகமேடை, ப.10
2. மேலது, ப.16
3. சு. சண்முகசுந்தரம், நாடகசரித்திரம், ப.2.
4. மேலது, ப.5
5. மேலது, ப.7
6. மேலது, ப.9
7. இணையம், 11.06.22
8. Tamil and Vedas.com
9. மதுரை தெருக்களின் வழியே – இணைய வழிப்பதிவு
10. க. இரவீந்திரன், தமிழ் நாடக வெளிப்பாட்டுக் களங்கள், பக். 194 – 195
11. தூங்கா நகர நினைவுகள் – முகநூல் பதிவு
12. பா. சிங்காரவேலன் மண் மணக்கும் கதைகள், ப.92